# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - MAY 2019

மலர்: 12 இதழ்: 8 மே 2019 விலை: ரூ. 10

- பாலியல் சுதந்திரத்தில் தவறுண்டா?
- மனமாற்றத்தை விட சிறந்த தீர்வு உண்டா?
- பெண்ணை இழிவு படுத்தும் மடமையை ஒழிப்போம்!
- பெண்ணினத்தின் பாதுகாப்பு தலையாயது



## பாலியல் கொடுமைகளைத் தடுக்க இறைவன் தரும் தீர்வுகள்

# திருக்குர்ஆனும் ரமலானும்

திருக்குர்ஆன் என்ற பேரற்புதம் மனிதகுலத்தின் நன்மையை நாடி இறைவனால் அருளப்பட்ட மாதமே ரமலான்! அதற்கு நன்றி கூறும் முகமாகவே திருமறைக் குர்ஆனின் வெளிப்பாட்டின் துவக்கத்தைக் கொண்டாடும் விதமாகவே இம்மாதம் உலகெங்கும் கண்ணியப்படுத்தப் படுகிறது. உயிரோடிருக்கும்போது இம்மாததத்தை அடையும் ஒவ்வொருவர் மீதும் பகலில் விரதமிருப்பது படைத்த இறைவனால் கடமையாக்கப் பட்டுள்ளது.

**● ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது, ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும், ...... ,, (திருக்குர்ஆன் 2:185)**

## நோன்பும் நோக்கமும்

நோன்பு என்பது இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக பசி, தாகம், இச்சை இவைகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை - அதாவது விடியற்காலையில் இருந்து சூரியன் மறையும் நேரம் வரை - கட்டுப்படுத்திக் கொள்வதாகும். நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

**● விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது, (அதனால்) நீங்கள் (உள்ளச்சம் பெற்று) பயபக்தியுடையவர்களாகலாம். (திருக்குர்ஆன் 2: 183)**

இறைவனுக்கு பயந்து, அவன் ஏவியவைகளை செய்தும், தடை செய்தவைகளை தவிர்த்தும் பொறுப்புணர்வோடு நடப்பதுதான் இறையச்சமாகும். அதற்கு உரிய பயிற்சியை நோன்பு கொடுக்கின்றது. பசியோடும், தாகத்தோடும் இருப்பது மாத்திரம் நோன்பாகாது. இவைகளை கட்டுப்படுத்துவது போல் மற்ற எல்லா பாவங்களையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

● யார் கெட்ட பேச்சுக்களையும், கெட்ட செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உணவை விடுவதிலும், குடிப்பை விடுவதிலும் இறைவனுக்கு எந்த தேவையும் இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: நபிமொழி நூல் புகாரி)

● எத்தனையோ நோன்பாளிகள் தனது நோன்பிலிருந்து பசியைத்தான் உணர்கிறார்களே தவிர வேறு எதையும் உணர்வதில்லை. எத்தனையோ இரவு நேரங்களில் நின்று வணங்கும் தொழுகையாளிகள் கண்விழித்தைத்தவிர வேறு எதையும் உணர்வதில்லை.( அறிவிப்பாளர்: அபுஹுரைரா (ரழி) நூல்: நஸயி, இப்னுமாஜா, ஹாகிம்.)

ரமலான் மாதத்தில் முஸ்லிமான, வயது வந்த, புத்தி சுவாதினமுள்ள, ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் நோன்பு நோற்பது கடமையாகும்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...


# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 12 இதழ்: 8 மே 2019 விலை: ரூ. 10


## பொருளடக்கம்


முழு சமூகமும் ஒத்துழைக்க வேண்டும் -2
பாலியல் சுதந்திரத்தில் தவறுண்டா? -4
பாலியல் சட்டங்களை யார் இயற்றுவது தகும்? -6
மனமாற்றத்தை விட சிறந்த தீர்வு உண்டா? -9
பொறுப்புணர்வோடு பாலியல் -அதுவே திருமணம்! -11
திருமணங்களை எளிதாக்குவோம் -13
சீர்கேட்டுக்கு வித்திடும் திருமண வயது வரம்பு! -16
திருமணத்தை எட்டாக்கனியாக்கும் வரதட்சணை! -18
பெண்ணை இழிவு படுத்தும் மடமையை ஒழிப்போம்! -19
பெண்ணினத்தின் பாதுகாப்பு தலையாயது -21
பெண்ணடிமைத்தனம் அல்ல பாதுகாப்பான சுதந்திரம் பர்தா! -23


**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**


Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி..

# முழு சமூகமும் ஒத்துழைக்க வேண்டும்

மனிதகுல இனப்பெருக்கத்தின் ஒரு முக்கியமான காரணியாக விளங்குபவை மனிதனுக்குள் அமைந்துள்ள பாலியல் உணர்வுகள். இந்த பாலியல் உணர்வுகளை எவ்வாறு மக்கள் தணிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே மனித வாழ்வில் அமைதியும் அமைதியின்மையும் உண்டாகின்றன. இவற்றைத் தான்தோன்றித்தனமாக தணிக்கும்போது அங்கு குழப்பங்களும் கலகங்களும் உருவாகின்றன. அதேவேளையில் கட்டுப்பாட்டோடும் நல்லோழுக்கத்தொடும் இந்த இயற்கையான உணர்வுகளைத் தணிக்கும்போது அங்கு அமைதியான கட்டுக்கோப்பான சமூகம் உருவாகிறது. எனவே பாலியல் கொடூரங்கள் திடீரென நிகழும் பொழுது சமூகம் ஒட்டுமொத்தமாக விழித்தெழுந்து குற்றவாளிகளை சபிப்பதாலோ அரசையும் காவல்துறையையும் நீதித்துறையையும் திட்டித் தீர்ப்பதாலோ பிரச்சினை தீரப்போவதில்லை. உண்மையான தீர்வு சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒருங்கிணைந்து இறைவன் விதிக்கும் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில்தான் உள்ளது.

அதற்காக மனித மனங்களைப் பண்படுத்தி நம்மைப் படைத்த இறைவன் விதிக்கும் கட்டுப்பாடுகளைப் பேணி வாழ்வதில் சில சிரமங்கள் இருந்தாலும் அவை வீண்போவதில்லை என்ற நம்பிக்கையை விதைத்து தனி மனித நல்லொழுக்கத்திற்கு அடிப்படையாக்குகிறது இஸ்லாம். இறைவனின் வேதமாகிய திருக்குர்ஆனும் நபிகளாரின் போதனைகளும் அப்படிப்பட்ட நம்பிக்கையை ஆழமாக விதைக்கின்றன.

**● பெண்கள், ஆண் மக்கள் பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங்குவியல்கள் அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள் (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது இவை(யெல்லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருள்களாகும் இறைவனிடத்திலோ அழகான தங்குமிடம் உண்டு.**

**(நபியே!) நீர் கூறும்: "அவற்றை விட மேலானவை பற்றிய செய்தியை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? பயபக்தி உடையவர்களுக்கு, அவர்களுடைய இறைவனிடத்தில் சுவனபதிகள் உண்டு. அவற்றின் கீழ் நீரோடைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன் அவர்கள் அங்கு என்றென்றும் தங்குவார்கள் (அங்கு அவர்களுக்குத்) தூய துணைகள் உண்டு இன்னும் இறைவனின் திருப் பொருத்தமும் உண்டு. இறைவன் தன் அடியார்களை உற்று நோக்குகிறவனாக இருக்கின்றான். (திருக்குர்ஆன் 3:14,15)**

அதாவது இந்தக் குறுகிய வாழ்க்கை என்பது ஒரு பரீட்சை. இதில் நம் இச்சைகளைக் கட்டுப்படுத்தி நெறியோடு வாழ்ந்தால் அவற்றுக்காக அளவிலா இன்பங்கள் நிறைந்த சுவனப்பதியில் அமர வாழ்வு வாழும் வாய்ப்பை இறைவன் வழங்க உள்ளான். மாறாக நிலையற்ற இந்தத் தற்காலிக வாழ்வில் இறைவனையும் மறுமையையும் மறுத்து தான்தோன்றித்தனமாக வாழ்பவர்களுக்கு இப்பூவுலகிலும்

அமைதியின்மையே. மறுமையில் நரக தண்டனையும் காத்திருக்கிறது.

மனித வாழ்வின் இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துக்கொண்டு அனைவரும் பேணுதலோடு வாழ்ந்தால் இந்த பூமியில் ஆரோக்கியமான சமூகம் அமையும். சுயகட்டுப்பாடு, பொறுப்புணர்வு, சகிப்புத்தன்மை, தியாகம் போன்ற அரிய பண்புகள் தனிநபர்களில் உருவாகும். பரஸ்பர அன்பு, உரிமை மற்றும் கடமை பேணுதல், விட்டுகொடுத்தல், கூட்டுறவு போன்றவற்றால் சமூக உறவுகள் செழிக்கும். அப்போதுதான் அங்கு பெற்றோரை மதிக்கும் பிள்ளைகளும், பொறுப்புணர்வு உள்ள பெற்றோர்களும், கணவனை மதிக்கும் மனைவிகளும் மனைவியை மதிக்கும் கணவன்மார்களும் சகோதரத்துவமும் சமத்துவமும் பேணும் சமூகம் உருவாகும். பூமியே சிறந்த ஒரு வாழ்விடமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

அவ்வாறு ஒரு ஆரோக்கியமான சமூகம் அமைய வேண்டுமானால் நாம் காலதாமதமின்றி மக்களின் சீர்திருத்தத்திற்கான வழிகளைக் கைகொள்ளவேண்டும். அதற்கு ஒன்றே மனித குலம் என்ற சகோதர உணர்வு, படைத்தவனே அனைவருக்கும் இறைவன், அவனது கண்காணிப்பில் உள்ளோம், அவனிடமே நம் மீழுதல், மறுமையில் இறைவனது விசாரணையும் சொர்க்கமும் நரகமும் உண்டு என்ற உறுதியான நம்பிக்கைகளை மனித மனங்களில் விதைத்து இறைவன் கற்பிக்கும் ஏவல் விலக்கல்களை பேணி வாழும் பண்பை சிறுவயது முதலே மக்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

# பெண்களுக்கும் ஆன்மீகத்தில் சம அந்தஸ்து

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் ஆன்மீகத்தில் சம அந்தஸ்த்தையும் உரிமைகளையும் இறைவன் வழங்கியுள்ளான். நன்மையான செயல்களுக்கான கூலி இரு சாராருக்கும் சமமாக வழங்கப்படுகிறது:

- **நிச்சயமாக இறைவனுக்கு கீழ்படியும் ஆண்களும், பெண்களும்நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும் உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும்பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும் (அல்லாஹ்விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும், பெண்களும் தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும்தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும்,பெண்களும் அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் - ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்.**

**(திருக்குர்ஆன் 33:35)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி..

# பாலியல் சுதந்திரத்தில் தவறுண்டா?

பசியையும் ருசியையும் போன்று மனிதனுக்குள் விதைக்கப்பட்ட மற்றொரு உணர்வே பாலியல் உணர்வு. பசியையும் ருசியையும் மனிதனுக்குள் விதைத்த இறைவனே அவற்றை தணிப்பதற்கு உணவையும் பானங்களையும் அதை ஜீரணிப்பதற்கு உடல் உறுப்புக்களையும் படைத்துள்ளான். அதே போலவே எதிர் பாலினத்தின் மீது ஈர்ப்பு, காதல், காமம் போன்ற உணர்வுகளை மனிதனுக்குள் விதைத்த இறைவனே அவற்றை தணிப்பதற்குரிய அவையவங்களையும் மனித உடலில் அமைத்துள்ளான். எனவே இந்த உணர்வுகளை மனிதன் தான் விரும்பியவாறு தணித்துக்கொள்வதில் தவறுண்டா? ஆம், கண்டிப்பாகத் தவறு உண்டு என்பதைத்தான் பொள்ளாச்சி, சேலம் மற்றும் கோவை சம்பவங்கள் நாட்டில் உண்டாக்கி வரும் கொந்தளிப்புகள் உறுதிப் படுத்துகின்றன.

பசி, தாகம் இவற்றை தணிக்கும்போது உண்டாகும் விளைவுகள் அந்த மனிதனை மட்டும் பாதிக்கும். ஆனால் பாலியல் உணர்வுகளைத் தணிக்கும் போது உண்டாகும் விளைவுகள் அப்படிப்பட்டவை அல்ல. அவை முதலில் இன்னொரு நபரை மட்டுமல்ல, அவ்விருவர் சார்ந்த குடும்பத்தையும் சூழவுள்ள சமூகத்தையும் கண்டிப்பாக பாதிக்கும் என்பதை நாம் அறிவோம். அது சம்பந்தப்பட்ட இருவரின் இசைவோடு நடந்தேறினாலும் சரியே!

தனி மனிதனுக்கு நிச்சயமாக ஒரு சில செயல்பாடுகளில் – அதாவது பிறரை பாதிக்காதவற்றில் - தனி சுதந்திரம் இருப்பது உண்மையே. ஆனால் மனிதனின் பெரும்பாலான செயல்பாடுகள் மற்ற மனிதர்களையும் சமூகத்தையும் பாதிக்கக்கூடியதாகவும் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் இந்த பாலியல் தொடர்புள்ள செயல்பாடுகளும்!

## கட்டுப்பாடற்ற பாலியல் சுதந்திரம்

உதாரணமாக கட்டுப்பாடற்ற பாலியல் சுதந்திரம் வழங்கப் பட்டால் அதாவது யாரும் யாரோடும் பாலியல் உறவு கொள்ளலாம், அதைத் தட்டிக்கேட்க யாருக்கும் உரிமையில்லை என்ற நிலை உண்டானால் என்ன நடக்கும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

- சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு அறவே பாதுகாப்பற்ற சூழல் உண்டாகும்.
- குடும்ப அமைப்பு என்பது சின்னாபின்னமாக சீர்குலையும்.
- கணவன், மனைவி, தாய், தந்தை, மக்கள், சகோதரன், சகோதரி உறவுகள் அர்த்தமற்றவையாகிப் போகும்.
- பரஸ்பர நம்பிக்கை, பொறுப்புணர்வு, மரியாதை போன்றவை மறைந்து அங்கு நம்பிக்கை மோசடி, பொறுப்பின்மை, தான்தோன்றித்தனம், காட்டுமிராண்டித்தனம் போன்றவை உடலெடுக்கும்.

● அங்கு பெண்கள் அநியாயமாக அந்நியனின் கற்பத்தை சுமந்து பின்னர் கைவிடப் படுவார்கள். தொடர்ந்து கருக்கொலைகள், சிசுக்கொலைகள், தற்கொலைகள், அனாதைகள், தந்தைகள் இல்லாப் பிள்ளைகள், வேண்டா வெறுப்பாக வளர்க்கப்படும் பிள்ளைகள், பொறுப்பற்ற குழந்தை வளர்ப்பு போன்ற விபரீதங்கள் உருவாகும்.

● ஒழுக்க சீர்கேடு, சுயநலம், திருட்டு, கொள்ளை, கொலை என அனைத்து தீமைகளும் மலிந்து அறவே அபாயகரமான சமூக சூழல் அமையும. மக்கள் வாழவே வெறுத்துவிடும் நிலை ஏற்படும். பிறகு என்ன நிகழும்?.. தற்கொலைகள் மலிந்துவிடும்.

அதை நோக்கித்தானே நாம் இன்று சென்று கொண்டிருக்கிறோம்! இன்று இந்த பாலியல் சுதந்திரம் ஓரளவுக்குக் கட்டுபடுத்தப்பட்ட நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம். ஆம், தேசிய குற்றவியல் ஆவணக்காப்பகத்தின் சமீபத்திய அறிக்கைப்படி இன்று நாளொன்றுக்கு 371 நம் நாட்டில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படாத தற்கொலை எண்ணிக்கையையும் கணக்கி லெடுத்தால், நம்நாட்டில் ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேற்பட்ட தற்கொலைகள் ஒவ்வொரு நாளும் நிகழ்கின்றன என்பதே உண்மை!

## அமைதியை மீட்ட சட்டங்களும் கட்டுப்பாடுகளும் தேவை

இன்று நாம் வாழும் சமூகத்தில் அமைதி உண்டாக வேண்டும் என்று விரும்புவோமேயானால் இங்கு பாலியல் தொடர்பான நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவு. நமது குடும்பங்களிலும் அல்லது சமூகத்திலும் தீய பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க தெளிவான விதிமுறைகளும் தேவைப்படுகின்றன, அவை முறையாக பின்பற்றப்படவும் வேண்டும்.

சரி, இந்த விதிமுறைகளை எங்கிருந்து பெறுவது? இவற்றை எவ்வாறு நிர்ணயிப்பது? யார் நிர்ணயிப்பது? இங்குதான் நாம் பகுத்தறிவு பூர்வமாக சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

# மானிட சமன்பாடு

பெண்கள் மனித இனமா, பெண்களுக்கு ஆன்மா உண்டா என்றெல்லாம் பிற சமூகங்களில் விவாதம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், ஆண்களும் பெண்களும் சமமே, அவர்கள் ஒரே ஆண் பெண்ணிலிருந்து தோன்றியோர் என்பதை தெளிவாக எடுத்துரைத்து இந்த இழிவுக்கு முடிவு கட்டியது இஸ்லாம். அவர்களோடு உள்ள சகோதரத்துவத்தையும் உறுதிப்படுத்தி இறுதிநாள் வரை பின்பற்ற அடித்தளமிட்டது இஸ்லாம்.

● **“மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனை பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவரது மனைவியைப் படைத்தான். பின்னர், அவர்கள் இருவரிலிருந்தும் பல ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்“.**

**(திருக்குர்ஆன் 4:1)**

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி..


# பாலியல் சட்டங்களை யார் இயற்றுவது தகும்?

பாலியல் வன்கொடுமைகள் நாட்டில் கொந்தளிப்பை உண்டாகும்போது மக்கள் குற்றவாளிகளை தயவு தாட்சண்யம் பாராமல் பொது இடங்களில் தூக்கில் இடவேண்டும், குற்றவாளியின் பிறப்புறுப்பை அறுத்தெறிய வேண்டும், அவனைக் கண்டம் துண்டமாக வெட்ட வேண்டும் என்றெல்லாம் குமுறுவதை நாம் காண்கிறோம். மெல்லமெல்ல இந்தக் குமுறல் அடங்குகிறது. சிறிதுகாலம் கடந்த பின் மீண்டும் எழுகிறது. மீண்டும் அடங்குகிறது... மீண்டும் எழுகிறது... அதாவது பிரச்சினை தீர்வு காணப்படாமல் தொடர்கிறது. இந்நிலைக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று முறையான பாலியல் தொடர்பான விதிமுறைகளும் சட்டங்களும் இல்லாமையே!

பாலியல் தொடர்பான விதிமுறைகளை எங்கிருந்து பெறுவது? இவற்றை எவ்வாறு நிர்ணயிப்பது? யார் நிர்ணயிப்பது? இங்குதான் நாம் பகுத்தறிவு பூர்வமாக சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## உருவாக்கியவனைப் புறக்கணிக்கலாமா?

நாம் வாழ்வில் அன்றாடம் புழங்கும் தையல் மிஷின், வாஷிங் மிஷின், ஸ்கூட்டர் போன்ற பொருட்களை அவர்களின் தயாரிப்பாளர்கள் தரும் பயன்பாட்டு கையேட்டைப் (Instruction manual) புறக்கணித்துவிட்டு தான்தோன்றித்தனமாக நாமே நம் மனம்போன போக்கில் பயன்படுத்தினால் என்னென்ன விபரீதங்களும் விபத்துக்களும் ஏற்படும் என்பதை நாம் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். நாம் பயன்படுத்தும் இயந்திரங்களிலேயே அதிக சிக்கல்களும் நுட்பங்களும் கொண்டது (most complicated) நமது உடல் என்ற இயந்திரம். இதைத் தயாரித்தவனை நாம் புறக்கணித்து விட்டு நம் மனம்போன போக்கில் பயன்படுத்தினால் ஏற்படும் விபரீதங்களைத்தான் இன்று நாம் அனுபவித்து வருகிறோம்.




அற்ப அறிவும் ஆயுளும் கொண்ட ஒரு மனிதன் சக மனிதனுக்கான பாலியல் சட்டங்களை இயற்றவோ பரிந்துரைக்கவோ அறவே தகுதி இல்லாதவன் என்பதை நாம் முதற்கண் உணரவேண்டும். எந்த ஒரு தனிநபரும் சரி, மனிதர்களின் குழுக்களும் சங்கங்களும் சரி, ஊர் நிர்வாகமும் சரி, அரசியல் கட்சிகளும் அல்லது நாடாள்பவர்களும் சரி, இவர்களில்

யாரும் பாலியல் சட்டங்களை இயற்றவோ பரிந்துரைக்கவோ சற்றும் தகுதி இல்லாதவர்களே என்பதை நாம் உணரவேண்டும். சமூகத்தில் உண்டாகும் ஏதேனும் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட ஏதேனும் மக்கள் இயக்கங்களும் - உதாரணமாக கம்யுனிச இயக்கம், மனித உரிமை இயக்கம், பெண்ணுரிமை இயக்கம் போன்றவைகளும் - இதற்குத் தகுதி பெற்றவை அல்ல என்பது தெளிவு.

### படைத்தவன் மட்டுமே தகுதிபெற்றவன்

ஆண் பெண் உடற்கூறுகளையும் அவற்றின் இயற்கையையும் அவர்களின் பருவ மாற்றங்களையும் அவற்றுக்கேற்ற தேவைகளையும் உளவியலையும் அவர்களது வாழ்வின் நோக்கத்தையும் முழுமையாக அறிந்தவன் அவர்களின் படைப்பாளன் மட்டுமே. அவன் மட்டுமே பக்குவமான பாலியல் சட்டங்களை இயற்ற முடியும். அவன் மட்டுமே ஆணுக்கும் பெண்ணுக்கும் சமூகத்தில் அவர்களது பங்கு, கடமைகள், பொறுப்புக்கள், போன்றவற்றை முழுமையாக நிர்ணயிக்கக் கூடியவன். அந்த சர்வஞானமும் சர்வ வல்லமை கொண்டவனும் நுண்ணறிவாளனும் ஆன இறைவன் நமக்கு வழங்கும் வாழ்வியல் சட்டங்களே மிகமிகப் பக்குவமானவை. அனைத்து மனிதகுலத்துக்கும் பொருத்தமானவை. அனைத்து படைப்பினங்களோடும் இணக்கமானவை. அந்த இறைவன் ஒருவனே அனைத்துலகுக்கும் சொந்தக்காரன் என்பதால் அவன் மட்டுமே அனைத்து மனிதர்களின் உரிமைகளையும் மிருகங்களின் மற்றும் இன்ன பிற படைப்பினங்களின் உரிமைகளையும் பக்குவமான முறையில் பங்கீடு செய்து நிர்ணயிக்கவும் தகுதியானவன். அந்த இறைவன் வகுத்து வழங்கும் வாழ்வியல் சட்டங்களின் ஒரு பிரிவே பாலியல் தொடர்பான சட்டங்கள்.

### சரி, இந்த வாழ்வியல் சட்டங்களை இறைவன் எதற்காக வழங்கியுள்ளான்?

இங்குதான் நாம் இந்த வாழ்க்கையின் நோக்கத்தையும் மறுமையையும் பற்றி சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். நாம் வாழும் இந்தக் குறுகிய வாழ்க்கையை இறைவன் ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைத்துள்ளான். இறைவன் நமக்கு வழங்கும் வாழ்வியல் சட்டங்கள் நமது இம்மை மற்றும் மறுமை வாழ்வை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை உரிய முறையில் நிறைவேற்றும் பொழுது இவ்வுலக வாழ்க்கையும் அமைதியாக அமையும். மறுமையில் மோட்சமும் கிடைக்கும்.

### பாலியலே வாழ்வியலின் ஆதாரம்:

மனித வாழ்வியலின் ஆதாரமாக உள்ளவை பாலியல் உணர்வுகளும் அதைத் தணிக்கும் வழிமுறைகளும். இவற்றை உரிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நிறைவேற்றும் வரை மனித சமூகத்தில் அமைதி நீடிக்கும். அதற்கான வழிகாட்டுதலை இறைவன் தன் வேதங்களின் மூலமாகவும் தூதர்களின் மூலமாகவும் அவ்வப்போது வழங்கி வந்துள்ளான். அதன் விளைவாகவே திருமணங்களும் குடும்ப உறவுகளைப் பேணும் வழிமுறைகளும் மனித சமூகத்தில் உருவாயின. அந்த இறைத்

தூதர்களில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அவர் மூலமாக அருளப்பட்ட இறைவேதமே திருக்குர்ஆன். இறைவனின் ஏவல்-விலக்கல்களுக்கு கட்டுப்பட்டு வாழும் முறையே இன்று இஸ்லாம் என்று அரபுமொழியில் அறியப்படுகிறது.

ஆக, ஆண்- பெண் உறவுகள் விடயத்தில் மட்டுமல்ல, வாழ்வின் எல்லா விடயங்களிலும் அவன் கற்பிக்கும் ஏவல்-விலக்கல்களைப் பேணி வாழ்வதுதான் அறிவுடைமையாகும். அவற்றை பின்பற்றி நடைமுறைக்கு கொண்டுவந்தால் மட்டுமே இவ்வுலக வாழ்வு அமைதி மிக்கதாக அமையும்.

சரி, இவற்றை பின்பற்றாவிட்டால்......?

இவ்வுலக வாழ்வை மேற்கூறப்பட்ட விபரீதங்களுக்கு மத்தியில் அல்லல்பட்டு கழிக்க வேண்டியிருக்கும் என்பது மட்டுமல்ல. அந்த இறைவன் நமக்கு வழங்கிய வாழ்க்கைத் திட்டத்தை புறக்கணித்து வாழ்ந்ததன் காரணமாக மறுமை வாழ்வில் தண்டனையையும் அனுபவிக்க நேரும்.

● **அவனே அல்லாஹ்! வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அனைத்துப் புகழும் அவனுக்கே. இம்மையிலும் மறுமையிலும் தீர்ப்பு கூறும் அதிகாரம் அவனுக்கே உரியதாகும். மேலும், அவனிடமே நீங்கள் அனைவரும் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 28:70)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்துக்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

# அனுமதி கேட்டு நுழைக!

**நபித்தோழர் அதாவு இப்னு யஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

**“ஒரு நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கேட்டார்: “இறைத்தூதரே! என் தாயைச் சந்திக்க நான் அனுமதி கேட்க வேண்டுமா?” “ஆம்!” என்றார்கள் நபிகளார். மீண்டும் அந்த நபித்தோழர் அவ்வாறே கேட்க? நபிகளார் முன்பு போன்றே பதில் தந்தார்கள் அவருக்கு. மூன்றாம் முறையும் அவர் “என் சொந்தத் தாயைச் சந்திக்கக் கூடவா அனுமதி கேட்க வேண்டும்?’ என்றார். அப்போது நபிகளார் (ஸல்) அவர்கள் “உன் தாயை ஆடையின்றி நிர்வாணமாக பார்க்க விரும்புகின்றாயா?” என்று கேட்டார்கள். அதற்கு அவர் “இல்லை இறைத்தூதர் அவர்களே!” என்றார். ”அப்படியென்றால் உன் தாயைச் சந்திக்க அனுமதி கேட்டு விட்டு உன் வீட்டினுள் நுழை” என்று பதில் கூறினார்கள்.**

**(நூல்: த:ஃப்ஸீர் குர்துபீ, பாகம்:7,பக்கம்:151.)**

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி..

# மனமாற்றத்தை விட சிறந்த தீர்வு உண்டா?

பாலியல் குற்றங்கள் உட்பட எந்த ஒரு குற்றத்தையும் தடுத்து நிறுத்தும் சக்தி இஸ்லாம் கற்பிக்கும் இறையச்சத்திற்கு உண்டு. இறையச்சத்தை எவ்வாறு உண்டாக்குவது?

- படைத்தவனே இறைவன்,
- வாழ்க்கை என்பது ஒரு பரீட்சை,
- இதில் நம் அனைவரது செயல்களும் இறைவனது கண்காணிப்பில் உள்ளன.
- இந்த வாழ்க்கையை முடித்துக் கொண்டு இறைவனிடம் மீள உள்ளோம்,
- அங்கு இறுதி விசாரணை நடக்க உள்ளது.
- நமது புண்ணியங்களுக்கு பரிசாக சொர்க்கம் கிடைக்கும்.
- பாவங்களுக்கு தண்டனையாக நரகமும் கிடைக்க உள்ளது.

இந்த உண்மைகளை பகுத்தறிவு பூர்வமாக மனிதனுக்குள் விதைத்து உண்டாக்கப்படும் பொறுப்புணர்வுதான் இறையச்சம் என்று அறியப்படுகிறது.

இந்த உண்மைகளை வெறுமனே போதிப்பதோடு நில்லாமல் அவற்றை சதா நினைவூட்டும் வண்ணமாக ஐவேளைத் தொழுகை, திருக்குர்ஆன் ஓதுதல், வெள்ளிக்கிழமைகளில் சொற்பொழிவுகள், ரமளானில் விரதம் போன்ற இறையச்சம் வளர்ப்பதற்கான பல வழிமுறைகளையும் இஸ்லாம் கற்பித்து நடைமுறைப்படுத்துகிறது. இஸ்லாம் என்பது இறைவன் நமக்கு வழங்கும் ஒரு முழுமையான வாழ்வியல் வழிமுறைகளின் தொகுப்பு. இவற்றை ஏற்று வாழும்போது தனிநபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் கட்டுப்பாடுகளும் ஒழுக்கமும் பேணப்படும். அதன் காரணமாக ஒழுக்கம் நிறைந்த சமூகமும் உருவாகும். அவ்வாறு சமூகம் அமையும்போது அங்கு மக்களை குற்றங்கள் செய்வதில் இருந்து தடுப்பதும் எளிதே!

அப்படிப்பட்ட ஒரு சமூகத்தை நபிகள் நாயகம்(ஸல்) தன் வாழ்நாளில் உருவாக்கிக் காட்டினார்கள். இறையச்சம் கொண்ட ஒரு வாலிபரை எவ்வாறு நபிகள் நாயகம் திருத்தினார்கள் என்பதைக் கீழ்கண்ட நிகழ்வின் மூலம் அறியலாம்:

### விபச்சாரம் செய்ய அனுமதி கேட்ட வாலிபர்:

நபித்தோழர் அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

“நாங்கள் அண்ணலாரோடு அமர்ந்திருந்த சபைக்கு ஓர் வாலிபர் வருகை தந்தார். வந்தவர் நேராக அண்ணலாரின் முன் வந்து நின்று “இறைவனின் தூதரே! எனக்கு நீங்கள் விபச்சாரம் செய்ய அனுமதி தர வேண்டும்” என்றார்.

அங்கிருந்த நபித்தோழர்கள் வெகுண்டெழுந்து அவரைத் தாக்கிட

முனைந்தனர். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ”அவரை ஒன்றும் செய்து விட வேண்டாம்” என்பது போன்று சைகை செய்தார்கள்.

பின்பு தங்களின் பக்கம் வருமாறு அவ்வாலிபரை அழைத்தார்கள். அருகே வந்து அமர்ந்த அந்த வாலிபரிடம் “உன் தாய் விபச்சாரம் செய்தால் அதை நீ விரும்புவாயா?” எனக் கேட்டார்கள்.

”இல்லை, இறைவனின் தூதரே! ஒரு போதும் நான் விரும்ப மாட்டேன்.” என்றார் அவ்வாலிபர்.

மீண்டும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் “உன் சகோதரி விபச்சாரம் செய்வதை நீ அங்கீகரிப்பாயா?” என்று கேட்டார்கள்.

பதறித்துடித்தவராக, “ஒரு போதும் எனது மனம் விரும்பிடாது” என்றார் அவ்வாலிபர்.

அப்போது நபிகளார் ”அப்படித்தான், நீ மட்டுமல்ல! உலகில் வேறெவரும் இதற்கு விரும்ப மாட்டார்கள்”. என்றார்கள்.

மீண்டும் அண்ணலார் அவ்வாலிபரிடத்தில் “உனது தாயின் சகோதரி விபச்சாரம் செய்வதை நீ விரும்புவாயா? உனது தந்தையின் சகோதரி விபச்சாரம் செய்வதை நீ விரும்புவாயா?” எனக் கேட்டார்கள்.

அண்ணலாரின் இந்த கேள்விகள் ஒவ்வொன்றும் அவரை வெகுவாகவே ”தாம் எத்தகைய பார தூரமான கேள்வியை இறைத்தூதரிடம் கேட்டு விட்டோம்” என்பதை உணர்த்தியிருக்க வேண்டும்.

அவர் வெட்கத்தால் தலைகுனிந்தவராக, “இல்லை, இல்லை, இறைத்தூதரே! ஒரு போதும் நான் விரும்ப மாட்டேன்” என்றார்.

அதன் பின்னர், நபிகளார் அவரை நோக்கி சீர்திருத்தும் தொனியில் “உமக்கு எதை நீ விரும்புகின்றாயோ, அதையே பிறருக்கும் நீ விரும்புவாயாக! உம் விஷயத்தில் எதை நீ வெறுப்பாயோ அதையே பிறரின் விஷயத்திலும் வெறுப்பாயாக!” என்று கூறினார்கள்.

இதைக் கேட்டதும், அந்த வாலிபர் மிகவும் பணிவுடன் “இறைவனின் தூதரே! எனது உள்ளம் தூய்மை பெற இறைவனிடம் இறைஞ்ச மாட்டீர்களா?” என ஏக்கத்துடன் கேட்டார்.

அவரை அருகில் அழைத்த நபிகளார், தமதருகே அமரவைத்து அவரின் நெஞ்சத்தின் மீது கை வைத்து, “இறைவா இவரின் இதயத்தை தூய்மைப் படுத்துவாயாக! இறைவா இவரின் பிழைகளைப் பொறுத்தருள்வாயாக! இறைவா இவரின் கற்பொழுக்கத்தை பாதுகாப்பாயாக!” என்று பிரார்த்தித்தார்கள்.

இறுதியாக அந்த வாலிபர் நபிகளாரிடமிருந்து விடை பெற்றுச் செல்கிற போது.... “இந்தச் சபையில் நான் நுழைகிற போது, விபச்சாரம்தான் நான் அதிகம் நேசிக்கும் விஷயமாக இருந்தது. ஆனால், இப்போது நான் அதிகம் வெறுக்கும் விஷயமாக அந்த விபச்சாரமே மாறிவிட்டது” என்று சொல்லியவாறே சென்றார்.

இந்த சம்பவத்தை அறிவிக்கும் நபித்தோழர் அபூ உமாமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "இதன் பின்பு அந்த வாலிபரின் வாழ்வினில் எந்த ஒரு தருணத்திலும் கற்பொழுக்கத்தை உரசிப்பார்க்கும் எந்த ஒரு செயலும் இடம் பெற வில்லை." (நூல்: முஸ்னத் அஹ்மத்,)

இது நீதிபோதனை என்ற பெயரில் புனையப்பட்ட கதையல்ல. நிஜம்! மனிதகுலத்திற்கு அழகிய முன்மாதிரியாக அனுப்பப்பட்ட நபிகளார் நடத்திய கவுன்செலிங் இது. பாலியல் இச்சைகளைத் தவறான முறையில் தீர்க்க விரும்பும் இளைஞர்களை நபிகளார் நினைவூட்டிய அந்த உண்மைகளை நினைவூட்டி யாரும் திருத்த முயற்சி செய்யலாம்.

**பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி..**

# பொறுப்புணர்வோடு பாலியல் -அதுவே திருமணம்!

குழப்பங்கள், சிக்கல்கள், சஞ்சலங்கள் போன்ற எண்ணற்ற விடயங்களின் கலவையே மனித வாழ்க்கை. இந்த சிக்கல்களிலேயே மனிதனை அதிகமாக ஆட்டிப்படைப்பது அவனது பாலியல் உணர்வுகள் என்பதில் ஐயமில்லை. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை இந்த விடயத்தில் தடம்புரள்வதை நாம் கண்டு வருகிறோம். எனவே இந்த உணர்வுகளைப் படைத்த இறைவன் அவற்றைப் பொறுப்புணர்வோடு அனுபவிக்க ஏற்படுத்திய இனிய வழிதான் திருமணம். அதாவது பாலியல் உணர்வுகளைத் தணிக்கும்போது உண்டாகும் விளைவுகளை உதாரணமாக கர்ப்பம், குழந்தை பிறப்பு, குழந்தை வளர்ப்பு போன்றவற்றை கடமை உணர்வோடு நிறைவேற்ற வழிவகை செய்கிறது திருமண பந்தம்.

- **நீங்கள் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளைப் படைத்திருப்பதும் உங்களிடையே அன்பையும், நேசத்தையும் உண்டாக்கியிருப்பதும், அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் (பற்பல) அத்தாட்சிகள் உள்ளன. (அல்குர்ஆன் 30:21)**

ஒருபுறம் பாலியல் உணர்வுகளை எப்படி வேண்டுமானாலும் நிறைவேற்றிக்கொள்ளும் வரம்புகளற்ற காட்டுமிராண்டித்தனத்தையும் அதன் விளைவாக வளர்ந்து வரும் தந்தைகளற்ற தலைமுறைகளையும் காண்கிறோம்.

மறுபுறம் சிலர் மதக்கட்டுப்பாடுகள் என்று சொல்லியும் திருமணம் ஆன்மீகத்துக்கு எதிரானது என்று சொல்லியும் மனித இயற்கைக்கு எதிரான துறவறத்தை வலியுறுத்துவதையும் காண்கிறோம். அதன் விபரீதமான விளைவுகளை ஊடகங்கள் அவ்வப்போது தோலுரித்துக் காட்டுவதையும் கண்டு வருகிறோம்!

ஆனால் மனித இயற்கையை வரைந்த இறைவனோ தனது மார்க்கத்தில் திருமணம் செய்து கொள்வதைக் கட்டாயமாக்குகிறான்.

- **'உங்களில் வாழ்கை துணையில்லாதவருக்கும், உங்களுடைய**

**ஆண் அடிமைகளுக்கும், இன்னும் நல்லொழுக்கமுள்ள அடிமைப் பெண்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் அல்லாஹ் தன்னுடைய பேரருளைக் கொண்டு அவர்களை செல்வந்தர்களாக்கி வைப்பான். மேலும் அல்லாஹ் மிக்க விசாலமானவன் நன்கறிந்தவன்' ( அல்குர்ஆன் 24:32)**

அத்தோடு நில்லாமல் இல்வாழ்க்கை என்பது ஓர் அறமாக ஒரு வழிபாடாக கற்றுத்தருகிறது இஸ்லாம். இல்லறம் என்பது ஒரு குறுகிய காலத்திற்கான ஏற்பாடு அல்ல, இல்லறத்தின் நோக்கம் வெறும் பாலியல் வேட்கை மட்டுமல்ல. மாறாக மாறுபட்ட சூழ்நிலைகளில் வளர்ந்து வந்த இரண்டு இதயங்கள் ஆயுள் காலம் வரை கருத்தொருமித்து இணைந்து அவர்கள் மூலம் உருவாகும் தலைமுறைக்கு அடித்தளமாக இருப்பதுதே இல்லறம் என்று கற்பிக்கிறது இஸ்லாம். அதற்கான மிக ஆழமான அழகான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது இஸ்லாம்.

## அந்நிய ஆண்-பெண் உறவு சட்டவிரோதம்

திருமண உறவுகளுக்கு அப்பாற்பட்ட அந்நிய ஆண்கள் மற்றும் அன்னியப் பெண்கள் இடையேயான அனைத்து உறவுகளும் இறைவனிடம் சட்ட விரோதமானவையே! காதல் என்ற பெயரில் இன்று நடந்துவரும் அந்நிய ஆண் பெண் பழகுதல், பேசுதல், ஒன்றாக இருத்தல் கூடிக்குலவுதல் போன்ற அனைத்துமே இறைவனிடம் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

ஒரு ஆண் மனைவியை மட்டுமே காதலிக்க முடியும். ஒரு பெண் கணவனை மட்டுமே காதலிக்க முடியும்.இதற்கு அப்பாற்பட்ட அனைத்தும் கள்ளக்காதல்களே! இது ஒரு தீவிரவாதமாக சிலருக்குப் படலாம். ஆனால் ஒரு ஒழுக்கம் நிறைந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்று விரும்புவோர் மட்டுமே இதை நியாயம் என்று உணர்வார்கள்!

சம்பந்தி உறவுகளை ஏற்படுத்தியவன் இறைவனே!

- **அவனே நீரிலிருந்து மனிதனைப் படைத்தான். அவனுக்கு (பிறப்பினால் வந்த) இரத்த சம்பந்தமான உறவுகளையும், (திருமணத்தால் வந்த) சம்பந்தி உறவுகளையும் ஏற்படுத்தினான். (திருக்குர்ஆன் 25:54 )**

## துறவறம் கூடாது :

இறைவன் அனுப்பிய திருத்தூதர்கள் அனைவரும் திருமணம் முடித்து இல்வாழ்க்கை வாழ்ந்து உண்மையான ஆன்மிகம் எது என்பதைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிச் சென்றார்கள்.

- **உமக்கு முன் தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கு மனைவியரையும் மக்களையும் ஏற்படுத்தினோம். (அல்குர்ஆன் 13:38)**

அவ்வழியில் இறுதியாக வந்த நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள் :

“திருமணம் எனது வழிமுறையாகும். யார் எனது வழிமுறையைப் பின்பற்றவில்லையோ அவர் என்னைச் சேர்ந்தவர் அல்ல.”

- **அவர்கள் தாமாகவே புதிதாக உண்டாக்கிக் கொண்ட துறவித்தனத்தை நாம் அவர்கள் மீது விதிக்க வில்லை. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைய வேண்டியேயன்றி (அவர்களே அதனை உண்டுபண்ணிக் கொண்டார்கள்) (அல்குர்ஆன் 57:27)**

# திருமணங்களை எளிதாக்குவோம்

மக்கள் தங்கள் பாலியல் உணர்வுகளைத் தணிப்பதற்கு இயற்கையான பாதுகாப்பான ஏற்பாடே திருமணம் என்பது. ஆனால் திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம். திருமணத்தின் மூலம் இல்லறத்தில் ஈடுபடவிருக்கும் மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையலான ஒரு வாழ்க்கை ஒப்பந்தம். எளிமையாக நடைபெறவேண்டிய இந்த ஒப்பந்தத்தை கடினமானதாக வீண் சடங்குகளை இணைத்து சிக்கல்கள் நிறைந்ததாக மக்கள் மாற்றியுள்ளதும் பாலியல் அத்துமீறல்களுக்குக் காரணமாகிறது.

## இஸ்லாம் காட்டும் எளிய திருமணம்

திருமணம் என்றால் இலட்சக் கணக்கில் செலவு செய்து நடத்த வேண்டிய ஒரு நிகழ்ச்சி அல்ல. மாறாக அது ஒரு வாழ்க்கை ஒப்பந்தம்தான் என்கிறான் இறைவன்:

- **அப்பெண்கள் உங்களிடமிருந்து கடுமையான உடன்படிக்கை செய்துள்ளனர். (அல்குர்ஆன் 4:21)**

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் திருமணத்தை எளிமையாக நடத்துவதை வலியுறுத்தி உள்ளார்கள்:

- “குறைந்த செலவில் நடத்தப்படும் திருமணமே அதிக அருள்வளம் நிறைந்தது” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) (நூல்: அஹ்மத்)

## எளிமையாக நிறைவேறிய திருமண ஒப்பந்தங்கள்

கீழ்காணும் நிகழ்வுகளை வாசிக்கும் முன் வாசகர்கள் இந்த விடயங்களை நினைவில் இருத்தினால் நலம்:

- இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் வரதட்சணை என்பது தடுக்கப்பட்ட ஒன்று. மாறாக மணமுடிக்க விரும்பும் ஆண்தான் பெண்ணுக்கு மஹர் எனும் மணக்கொடை கொடுக்கவேண்டும். திருமணம் நிறைவேற இது கட்டாயமான ஒன்று. ஏழையானாலும் மஹர் கொடுத்தேயாக வேண்டும்.
- பலதாரமணம் என்பது அராபியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் பரவலான ஒன்றாக இருந்து வந்துள்ளது. ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்று சொல்லிக்கொண்டு ‘ஸ்டெப்னி’, ‘வைப்பாட்டி’ ‘சின்னவீடு’ என்ற பெயர்களில் நடத்தப்படும் பொறுப்புணர்வற்ற பாலியல் அத்துமீறலகளை விட இம்முறை சிறந்தது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.
- கணவனை இழந்தவர்கள் அல்லது ஆதரவற்ற பெண்கள் தங்களின் பாதுகாப்புக்காக ஆண்களிடம் மணமுடிக்கக் கோரி அடைக்கலம் பெறுவது என்பது சகஜமான நிகழ்வாக நபிகளாரின் காலத்தில் இருந்துள்ளது.

### ஒப்பந்தம் ஒன்று:

- ஒரு பெண்மணி இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, “இறைத்தூதரே! என்னைத் தங்களுக்கு அன்பளிப்பாக வழங்கிட (மஹ்ரின்றி என்னைத் தாங்கள் மணந்து கொள்ள) வந்துள்ளேன்” என்று

சொன்னார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவரை நோக்கிப் பார்வையை உயர்த்தி நேராகப் பார்த்து விட்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டார்கள். பிறகு தமது தலையைத் தொங்க விட்டுக் கொண்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தம் விஷயத்தில் எந்த முடிவையும் செய்யவில்லை என்பதைக் கண்ட அந்தப் பெண் (அந்த இடத்திலேயே) அமர்ந்து கொண்டார். அப்போது நபித் தோழர்களில் ஒருவர் எழுந்து, "இறைத்தூதரே! தங்களுக்கு அவர் தேவையில்லையென்றால் அவரை எனக்கு மணமுடித்து வையுங்கள்" என்று சொன்னார். நபி (ஸல்) அவர்கள், "(மஹ்ராகச் செலுத்த) உம்மிடம் ஏதேனும் பொருள் உண்டா?" என்று கேட்டார்கள். அதற்கவர், "இறைவன் மீதாணையாக! என்னிடம் ஏதுமில்லை, இறைத்தூதரே!" என்றார்.

நபி (ஸல்) அவர்கள், "உம் குடும்பத்தாரிடம் சென்று ஏதாவது கிடைக்குமா என்று பார்!" என்றார்கள். அவரும் போய் பார்த்து விட்டுத் திரும்பி வந்து "இறைவன் மீதாணையாக! ஏதும் கிடைக்கவில்லை, இறைத்தூதரே!" என்று சொன்னார்.

"இரும்பாலான ஒரு மோதிரமாவது கிடைக்குமா என்று பார்!" என நபி (ஸல்) அவர்கள் சொல்லி அனுப்பினார்கள். அவர் மீண்டும் சென்று விட்டுத் திரும்பி வந்து, "இறைத்தூதரே! இரும்பாலான மோதிரம் கூடக் கிடைக்கவில்லை.

"ஆனால் இதோ இந்த எனது வேட்டி உள்ளது" என்று சொன்னார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இந்த வேட்டியை நீர் அணிந்து கொண்டால் அவள் மீது ஏதும் இருக்காது. அவள் அணிந்து கொண்டால் உம்மீது ஏதும் இருக்காது" என்று கூறினார்கள். பிறகு அந்த மனிதர் நீண்ட நேரம் அங்கேயே அமர்ந்து கொண்டார். பிறகு அவர் எழுந்தார். அவர் திரும்பிச் செல்வதை நபிகளார் பார்த்த போது அவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டார்கள். அவர் வரவழைக்கப்பட்ட போது, "உம்முடன் குர்ஆனில் என்ன (அத்தியாயங்கள் மனப்பாடமாக) உள்ளது?" என்று கேட்டார்கள். அவர், "இன்ன அத்தியாயம், இன்ன அத்தியாயம், இன்ன அத்தியாயம் என்னுடன் உள்ளன" என்று எண்ணி எண்ணிச் சொன்னார். நபி (ஸல்) அவர்கள், "அவற்றை நீர் மனப்பாடமாக ஓதுவீரா?" என்று கேட்டார்கள். அவர், "ஆம் (ஓதுவேன்)" என்று சொன்னார். நபி (ஸல்) அவர்கள், "உம்முடன் உள்ள குர்ஆன் அத்தியாயங்களுக்காக இப்பெண்ணை உமக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தேன். நீர் செல்லலாம்" என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஅத் (ரலி) (நூல்: புகாரி)

**ஒப்பந்தம் இரண்டு**

● நபித்தோழர் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் மக்காவில் இருந்து மதீனவுக்கு புலம்பெயர்ந்து வந்தவர். கடைவீதியில் வியாபாரம் செய்து செல்வந்தராக ஆகியிருந்தார். அவர் ஒருநாள் நபிகளாரிடம்

வந்தபோது அவரது ஆடையில் நறுமணப் பொருளின் கறைபடிந்திருப்பதை நபிகளார் கண்டார்கள். அவரிடம் நபி (ஸல்) அவர்கள், “என்ன விசேஷம்?” என்று கேட்டார்கள். அதற்கவர், “இறைத்தூதரே! நான் ஒரு மதீனத்துப் பெண்ணை மணமுடித்துக் கொண்டேன்” என்றார். நபி (ஸல்) அவர்கள், “அவருக்கு என்ன மஹர் கொடுத்தீர்கள்?” என்று கேட்டார்கள். “ஒரு பேரீச்சங் கொட்டை எடைக்குத் தங்கம்” என்று பதில் கூறினார். அதற்கு, “சரி, ஓர் ஆட்டையேனும் மணவிருந்தாக அளிப்பீராக!” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரலி) (நூல்: புகாரி)

மேற்படி சம்பவத்தில் இருந்து அப்துர்ரஹ்மான் பின் அவ்.்.ப் என்ற இந்த நபித்தோழர் திருமணம் செய்து கொண்ட விபரம் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னர்தான் தெரிகின்றது என்றால் இஸ்லாம் எந்த அளவுக்கு எளிமையான முறையில் திருமணங்கள் நடத்த வலியுறுத்துகிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட உதாரணங்கள் மூலம் திருமணத்தை எவ்வளவு எளிதாக்கிட முடியும் என்பதை அறிகிறோம். இன்று திருமணத்தின் பெயரில் செய்யப்படும் நிச்சயம், அழைப்பிதழ் வைத்தல், சீர் வரிசைகள் போன்ற சடங்குகள், ஆடம்பரங்கள், வாணவேடிக்கைகள், சீரியல் லைட்டுகள், பெண் வீட்டு விருந்துகள் என அனைத்தும் வீண் விரையங்களே. இவற்றை செய்யாமல் திருமணம் இல்லை என்ற நினைப்பு மக்களிடம் பரவியுள்ளதால் பாலியல் உணர்வுகளை தணிப்பதற்கு எளிமையான ஒரு வழிமுறையாக உள்ள திருமணம் சமூகத்தில் மிகவும் கடினமாக்கப்பட்டு உள்ளது. இதைத் தளர்த்த அனைவரும் முன்வரவேண்டும்.

## திருமண விருந்து

திருமணத்தில் விருந்து கொடுப்பது என்பது முழுக்க முழுக்க மணமகன் மீதான கடமை. இதைப் பெண் பெண் வீட்டார் மீது சுமத்துவது என்பது பாவமாகும். மணமகன் கொடுக்கும் இந்த விருந்தைக்கூட அவனது சக்திக்கு உட்பட்டுத்தான் வைக்க வேண்டும். கடன் வாங்கியோ அல்லது கையில் உள்ளதை விற்றோ பிச்சை எடுத்தோ விருந்து வைக்கக் கூடாது.

மேற்படி சம்பவத்தில், திருமணத்தின் போது அதிகப்பட்சமாக மணமகன் ஒரு விருந்தை வழங்குவதற்கு நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தி உள்ளார்கள். இதுவும் அவரவர் சக்திக்கு ஏற்ப சாதாரண முறையில் தான் அமைய வேண்டுமே தவிர கடன் வாங்கி, லட்சக்கணக்கில் செலவு செய்து விருந்து வைப்பதற்கு மார்க்கத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

- நபி (ஸல்) அவர்கள், (திருமணம் முடித்து வலீமா விருந்தளித்த போது) பிலால் (ரலி) அவர்களிடம் தோல் விரிப்பைக் கொண்டு வருமாறு உத்தரவிட அவ்வாறே அது விரிக்கப்பட்டது. பிறகு பேரீச்சம்பழம், பாலாடைக்கட்டி, நெய் போன்றவற்றை இட்டார்கள். (ஹைஸ் எனப்படும் எளிமையான உணவைத் தயாரித்து மக்களுக்கு விருந்தளித்தார்கள்)

அறிவிப்பவர்: அனஸ் (ரலி) (நூல்: புகாரி)

# சீர்கேட்டுக்கு வித்திடும் திருமண வயது வரம்பு!

பசி எடுக்கும் போது சாப்பிட வேண்டும் தூக்கம் வரும் போது கட்டிலை நாட வேண்டும் மலஜலம் கழிக்கத் தேவை ஏற்படும் போது, தாமதிக்காமல் கழிவறையை நாட வேண்டும். தாமதித்தால், அதுவே பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்து விடும் என்பது அனைவரும் அறிந்ததே!

நன்றாகப் பசியோடு உள்ள ஒருவனிடம் 'நீ இப்போது சாப்பிடக்கூடாது இன்னும் ஐந்து நாள் கழித்துதான் சாப்பிட வேண்டும்' என்று சட்டம் பேசுவது எவ்வளவு விபரீதமோ அதைப் போன்றதே திருமணத்திற்கு வயது வரம்பை நிர்ணயிப்பதும்! ஆம் பாலியல் அத்துமீறல்கள் நாட்டில் நடப்பதற்கான முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்று!

## வயதுக்கு வருதலே அறிகுறி

இஸ்லாம் என்பது இயற்கையான மார்க்கம். அதன் சட்டதிட்டங்கள் எல்லாமே மனித இயற்கைக்கு ஏற்ற விதத்திலேயே வடிவமைக்கப் பட்டிருக்கின்றன.

ஒருவர் திருமணம் செய்யும் ஆயத்த நிலையை - அதாவது வயதுக்கு வருதல், இஸ்லாம் கற்பிக்கும் பெண்ணுக்கான மஹர் கொடுக்கும் சக்தி, இல்லறத்தில் ஈடுபடும் உடல்தகுதி போன்றவற்றை - அடைந்துவிட்டாலே அவர் திருமணம் செய்யத் தகுதி பெற்று விடுகிறார். மாறாக அரசாங்கங்கள் *18, 21, 30* என்று நிர்ணயிக்கும் திருமண வயது என்பது செயற்கையானது. பற்பல விபரீதங்களுக்கு வித்திடுவது.

ஒரு மனிதன் வயதுக்கு வருகிறான் என்பதன் அர்த்தமே அவனுக்கு அல்லது அவளுக்கு பாலியல் தேவைகள் ஏற்பட ஆரம்பித்து விட்டன என்பதுதான். மேலும், ஒரு பெண் வயதுக்கு வருகிறாள் என்பதன் அர்த்தமே, அவளது கருவறை குழந்தையைச் சுமக்கும் அளவுக்குப் பரிபூரண வளர்ச்சியை அடைந்து விட்டது என்பது தான்.

பசி ஏற்பட்டால், உணவுக்கான ஏற்பாடுகள் ஆயத்தம் செய்யப்படுவது எப்படி அறிவார்ந்த செயலோ, அதே போலத்தான், வயதுக்கு வந்து விட்டால் அனாவசியமாக காலதாமதம் செய்யாமல், அவருக்குரிய ஜோடியை ஏற்பாடு செய்ய ஆரம்பிப்பதுதான் அறிவார்ந்த செயல். இல்லாவிட்டால், அது சமூக சீர்கேடுகளுக்கே நாளடைவில் வழிவகுக்கும்.

இந்த உண்மைகளையெல்லாம் சரிவர உணர்ந்து தான் ஏற்கனவே இஸ்லாம் திருமண வயது குறித்து எல்லை வரையறுக்காமல், அவரவர் உடற்கூற்றுக்கு ஏற்ப தீர்மானிக்கப் பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது.

## இளவயதுத் திருமணங்கள் ஆபத்தானவையா?

அப்படி ஒரு மாயை உண்டாக்கப்பட்டு உள்ளது என்பதே உண்மை. திருமணத்திற்கு வயதெல்லை போடும் அரசாங்கங்கள் காதலுக்கும், சல்லாபத்திற்கும் வயதெல்லையைப் போடுவதிவில்லை என்பதை

அறிவீர்கள். 18 வயதுதான் திருமண வயது என்றால் 18க்கு முன்னர் காதலிப்பதையும் சட்டப்படி குற்றமாக்க வேண்டும்தானே? ஏன் செய்வதில்லை?

வயதுக்கு வந்து திருமணம் மூலம் இணைந்த ஒரு ஜோடியையும் வயதுக்கு வந்து திருமணமாகாமல் இணையும் ஒரு ஜோடியையும் நீங்கள் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். யாரால் சமூகத்திற்கு கெடுதி? பெற்று வளர்த்த தாய் தந்தையரை ஏமாற்றுதல், அவர்களைக் கைவிட்டு ஓடிப்போகுதல், அந்நியனின் கருவை அநியாயமாகச் சுமந்து பின்னர் கைவிடப்படுதல், கருக்கொலை, சிசுக்கொலை, தற்கொலை, தந்தையற்ற பிள்ளைகளை வேண்டா வெறுப்போடு வளர்த்தல், ஒழுக்கமற்ற பிள்ளைகள் பெருக்கம், இவர்கள் மூலம் சமூகத்தில் உண்டாகும் குற்றங்கள் என பற்பல தொடர் தீமைகளின் காரணமாக இரண்டாம் வகையினர் விளங்குகிறார்கள்.

மாறாக இளவயதில் திருமணம் மூலம் இணைந்த தம்பதிகள் ஒழுக்கம் வாய்ந்த சமூகத்தை உருவாக்கும் அடித்தளம் அமைக்கிறார்கள். இளவயதிலேயே குடும்பப் பொறுப்புணர்வு, பெற்றோருக்குக் கீழ்படிதல், அவர்களோடு இணக்கம், முறையான குழந்தை வளர்ப்பு என பற்பல நன்மைகள் அங்கு உண்டாகின்றன. இல்லறத்தைப் பொறுத்தவரையில் முதற்காதல் என்பதே தன் வாழ்க்கைத் துணையோடுதான் என்ற அடிப்படையில் அந்த உறவு ஆழமாக தம்பதியர் உள்ளத்தில் பதியும். அதில் உருவாகும் சந்ததிகள் மீது ஈடுபாடும் பாசமும் ஆரோக்கியமான முறையில் இருக்கும். மாறாக இளவயதை காதலிலும் காமத்திலும் கழித்து இறுதியில் சூழ்நிலைக் கைதிகளாக வேண்டா வெறுப்போடு திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளிடையே காதலுக்கு அந்தத் திருமணமே முடிவுரை எழுதி விடுகிறது.


அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன் பெயரால்..

**மேதினத்தை முன்னிட்டு...**

**நல்லிணக்க விருந்து உபசரிப்பு**

**நாள் : 05 . 05 . 2019 ஞாயிற்றுக்கிழமை (இறைவன் நாடினால்)**

**நேரம்: காலை 10 . 00 மணி முதல் மாலை 5 . 00 மணி வரை நடைபெறும்**

**இடம் : கோல்டன் மஹால் , சிங்காரத்தோப்பு , திருச்சி – 8 .**

**நிகழ்ச்சியில்..**

- "இஸ்லாம் கூறும் இறைச்சட்டங்கள்" சொற்பொழிவு
- இஸ்லாம் குறித்த கேள்விகளுக்கு பதில்.
- விருந்து உபசரிப்பு .
- அனைத்து மத சகோதர, சகோதரிகள் குடும்பத்துடன் வருக! வருக! இறையருளைப் பெறுக!

அழைப்பில் மகிழும் ... சமூக சகோதரத்துவ இஸ்லாமிய பேரவை அறக்கட்டளை, திருச்சி.

தொடர்புக்கு : 94427 09087

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி....

# திருமணத்தை எட்டாக்கனியாக்கும் வரதட்சணை!

வரதட்சணை என்ற வன்கொடுமை திருமணங்களை எட்டாக்கனியாக ஆக்கி பாலியல் அத்துமீறல்களுக்கு துணைபோகிறது.



வரதட்சணை கொடுக்க வசதியில்லாத காரணத்தினால் குடும்பமே தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்ச்சிகள், மணவாழ்வு தள்ளிப் போகும் ஏக்கத்தால் பெண்கள் மனநோயாளி களாகிப் போகும் நிகழ்ச்சிகள் அன்றாடம் நடந்தாலும் இவையெல்லாம் சமுதாயத்தின் கல் மனதைத் கரைப்பதாக இல்லை. வயதுக்கு வந்தும் தக்க தருணத்தில் மணமாகாத பெண்கள் அந்நியர்களின் பாலியல் சீண்டல்களுக்கு பலியாகி அதன் காரணமாக அந்தக் குடும்பமே அவமானத்தால் தலை குனிவதும் தற்கொலை களில் அடைக்கலம் புகுவதும் நாம் அறிந்ததே. வரதட்சணைக் கொடுமை காரணமாக நீண்ட நாள் கன்னியாகவே வாழ்ந்து அவ்வாறே மரணித்தவர்களும் இருக்கிறார்கள் என்பது எவ்வளவு பெரிய கொடுமை!

பெண்கருக்கொலைகள் நடைபெறுவதற்கும் மீறிப்பிறந்தால் கள்ளிப்பால் ஊட்டியும் விஷ ஊசிகளைக் கொண்டும் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதற்கும் முக்கிய காரணமாக இருப்பது வரதட்சணையே. திருமணத்தின்போது வரதட்சணைக்கு நேர் எதிராக மஹர் என்னும் மணக்கொடையை மணமகன் மணமகளுக்கு வழங்குவதை கட்டாய கடமை ஆக்கியுள்ளது இஸ்லாம்.

● **நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக் கொடை)களை மகிழ்வோடு (கொடையாகக்) கொடுத்துவிடுங்கள் அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள் உங்களுக்கு கொடுத்தால் அதைத் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள் (அல்குர்ஆன் 4:4)**

## பெண் என்ற பொக்கிஷம்

பெண் என்பவள் ஒரு விலைமதிப்பற்ற பொக்கிஷம், அவளை அடைய வேண்டுமானால் அதற்காக ஆண் உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, திருமணத்தின் மூலம் உண்டாகும் அனைத்து செலவினங்களையும் குடும்பத்தின் பராமரிப்பையும் ஏற்பதை ஆணின்மீது சுமத்துகிறது. ஆணுக்கு நிகரான உரிமைகளை பெண்ணுக்கு வழங்கும் அதேவேளையில் அவளைக் காட்சிப் பொருளாக்கியும் கடைசரக்காக்கியும் இளமையிலேயே அவளது கற்ப்பை சூறையாட நினைக்கும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்க உரிய உடை ஒழுக்கத்தையும் ஆண் பெண் உறவு வரம்புகளையும் கற்ப்பிக்கிறது. இவ்வாறு பெண்ணைப் பெற்றவர்களின் தாழ்வு மனப்பான்மையை நீக்கி அவர்களைப் பெருமை மிக்கவர்களாக சமூகத்தில் உயர்த்துகிறது இஸ்லாம்!

<u>பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி...</u>

# பெண்ணை இழிவு படுத்தும் மடமையை ஒழிப்போம்!

பாலியல் குற்றங்களின் வளர்ச்சிக்கு மற்றுமொரு முக்கியமான காரணம் இந்த சமூகம் பெண்களின் மீது கொண்டுள்ள தவறான பார்வை. நமது சமூகம் பெண்களை ஒரு போகப் பொருளாகவும், அற்பமானவளாகவுமே பார்க்கிறது கற்பழிப்பால் பாதிக்கப்பட்டவளை களங்கப்பட்டவளாகப் பார்க்கும் இந்த சமூகத்தின் பார்வை மாறவேண்டும். தலைகுனிவும், குற்ற உணர்வும், அவமானமும் எவன் இக்குற்றத்தைப் புரிந்தானோ அவன்தான் பெற வேண்டுமே தவிர பாதிக்கப்பட்டவள் அல்ல. தொடர்ந்து அதிகரித்து வரும் பெண்களின் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்க, நாம் முதலில் நமது சமூகம் பெண்களின் மீது கொண்டுள்ள தவறான பார்வையை மாற்ற வேண்டும்.

**பெருமதிப்புக்குரியது பெண்ணினம் என்ற உண்மையை சமூகம் உணரவேண்டும்.**

குடும்பங்களே சமூக அமைப்பின் ஊற்றுக்கண்கள் எனபதையும் அதில் பெண்கள்தான் மனித இனத்தின் விளைநிலங்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அதில் உருவாகும் குழந்தைகள் எவ்வளவு நல்லொழுக்கத்தொடும் கட்டுப்பட்டோடும் வளர்கிறார்களோ அதைப் பொறுத்தே சமூகமும் ஒழுக்கமுள்ளதாக அமையும். சமூக வாழ்விலும் அமைதி நிலவும். தாய்மை என்ற புனிதமான பொறுப்பு பெண்கள் மீதுதான் சார்ந்திருப்பதால் அதைப் பாதுகாப்பதும் அவசியம் அதை மதிப்போடு நடத்துவதும் அவசியம்.

பெண்களுக்கு மதிப்பு அளிக்கவும் மரியாதை செய்யவும் கற்றுக்கொடுக்கிறான் இறைவன். பெண்களுக்கு உரிமைகளையும், கண்ணியத்தையும் உரிய முறையில் வழங்க தனது வேதம் மூலமாகவும் தூதர் மூலமாகவும் நீங்கள் காணலாம்.

**பெண்குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதம்**

பெண் குழந்தை பிறந்தால் இழிவாகக் கருதும் பெற்றோர்களிடம்தான் பெண்ணை இழிவு படுத்தும் செயல் முதன் முதலில் துவங்குகிறது. திருக்குர்ஆனில் இறைவன் இச்செயலை வன்மையாக கண்டிக்கிறான்.:

**● இவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை (பிறந்திருப்பது) பற்றி நற்செய்தி சொல்லப்பட்டால், அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கின்றது! துக்கத்தால் அவர் தொண்டை அடைத்துக் கொள்கிறது..இந்தக் கேவலமான செய்தி கிடைத்துவிட்டதே என்பதற்காக இனி யார் முகத்திலும் விழிக்கக்கூடாது என்று மக்களைவிட்டு ஒதுங்கிச் செல்கின்றார். அவமானப்பட்டுக் கொண்டு அப்பெண் குழந்தையை வைத்திருப்பதா அல்லது அதனை மண்ணில் புதைத்து விடுவதா என்று சிந்திக்கின்றார் பாருங்கள்! இறைவனைப் பற்றி இவர்கள் எடுத்த முடிவு எத்துணைக் கெட்டது!" - (திருக்குர்ஆன் 16:58,59).**

பெண் குழந்தை என்றால் இழிவு எனக் கருதி அவர்களை உயிருடன்

புதைக்கும் பழக்கம் அங்கு அராபியர்களிடம் இருந்து வந்தது. குழந்தைகளை கொலை செய்வதை குறிப்பாக பெண்குழந்தைகளை கொல்வதை கடுமையாக எச்சரித்து தடுத்தது. அதனை மறுமை வாழ்வுடன் தொடர்புபடுத்தி அச்சமூட்டுகிறான் இறைவன்:

**● "உயிருடன் புதைக்கப்பட்ட (பெண்குழந்தையான)வளும் வினவப்படும் போது. எக்குற்றத்திற்காக கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது) (திருக்குர்ஆன் 82:8-9)**

## பெண்களுக்கு அனைத்திலும் உரிமை

ஆணுக்கும் பெண்ணுக்கும் அவரவர் இயற்கைக்கும் ஏற்றவாறு இறைவன் உரிமைகளும் கடமைகளும் வழங்கியிருப்பதை நீங்கள் காணமுடியும்: எந்த பெண்ணுரிமை அமைப்புகளும் போராடமலேயே கீழ்கண்ட உரிமைகளை இஸ்லாமிய பெண்கள் பதினான்கு நூற்றாண்டுகளாக அனுபவித்து வருவதை நீங்கள் காணலாம்:

# படிப்பதற்கு உரிமை,

# பொருள் சேர்க்கும் உரிமை. தான் சம்பாதித்ததை தானே வைத்துக்கொள்ளும் உரிமை.

# மணமகனை தேர்ந்தெடுக்கும் உரிமை

# வரதட்சணைக்கு நேர்மாற்றமான மஹர் (வதுதட்சணை) பெறும் உரிமை,

# விவாக ரத்து உரிமை

# பெற்றோர், கணவன், சகோதரன், மகன் இவர்களின் சொத்துகளில் இருந்து வாரிசுரிமை.

மட்டுமல்ல கற்பொழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறுவோருக்கு கடுமையான தண்டனைகள், முதிய வயதில் பராமரிக்க மறுக்கும் பிள்ளைகளுக்கு கடுமையான எச்சரிகைகள் இவை போன்ற பல நடவடிக்கைகள் மூலம் பெண்ணினத்தின் கண்ணியத்தையும் தன்னம்பிக்கையையும் இஸ்லாம் பாதுகாப்பதை நாம் காணலாம்.

இல்லறத்தில் சம உரிமை

**● "அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்." - (திருக்குர்ஆன் 2:187)**

**● "உங்களில் எவருடைய நற்செயலையும் நான் வீணாக்கவே மாட்டேன் அவர் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி! நீங்கள் ஒருவர் மற்றவரிலிருந்து தோன்றிய (ஒரே இனத்த)வர்களே!" (திருக்குர்ஆன் 3:195)**

● "பெண்களைக் குறித்து இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள்! உங்களுக்கு அவர்களின் மீது சில உரிமைகள் உள்ளன, அவ்வாறே அவர்களுக்கும் உங்களின் மீது சில உரிமைகள் உள்ளன" - நபிமொழி

● "உங்களில் சிறந்தவர் உங்களின் மனைவியிடத்தில் சிறந்தவரே" – நபிமொழி

அதாவது யார் பெண்களிடத்தில் அழகிய முறையில் நடந்து

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி...

# பெண்ணினத்தின் பாதுகாப்பு தலையாயது

குடும்பங்களே சமூக அமைப்பின் ஊற்றுக்கண்கள் எனபதையும் அதில் பெண்கள்தான் மனித இனத்தின் விளைநிலங்கள் என்பதை அறிவோம். தாய்மை என்ற புனிதமான பொறுப்பு பெண்கள் மீது சார்ந்திருப்பதால் மனிதசமுதாயத்தின் ஆரோக்கியமான சூழலுக்கும் அமைதிக்கும் பெண்மை என்பது பாதுகாக்கப்பட்டே ஆகவேண்டும்.

'பெண்ணுரிமை' என்றும் 'பெண்விடுதலை' என்ற பெயரில் கட்டுப்பாடற்ற சுதந்திரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் முதலில் பாதிக்கப்படுவது அப்பெண்தான். உதாரணமாக அநியாயமாக ஒரு அந்நியனின் கற்பத்தைச் சுமந்தபின் கைவிடப்படுவாள். அவள் திருமணமானவளாக இருந்தால் என்னென்ன விளைவுகள் உண்டாகும் என்பது அனைவரும் அறிந்ததே! அடுத்த பாதிப்பு அவளது பெற்றோருக்கு. சிறுவயது முதலே அவள்மீது பாசமும் நம்பிக்கையும் வைத்து கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தபின் அனைத்தையும் இழந்துவிடும் அவலம்! அடுத்த பாதிப்பு சமூகத்திற்கு தந்தைகளற்ற குழந்தைகளும் சீர்குலைந்த குடும்பங்களும் விபச்சாரம், கொலை, கொள்ளை, மோசடிகள் என பாவங்களும் நிறைந்து மனிதன் வாழவே வெறுத்துவிடும் நிலை உருவாகும். இதை அனுபவப்பூர்வமாகவே அறிந்து வருகிறோம். புள்ளிவிவரங்களின் படி, நாளொன்றுக்கு 600 கற்பழிப்புகளும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தற்கொலைகளும் நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் முன்னர் அறிந்தோம்.

### பெண்ணின் பாதுகாப்புக்காக இறைவன் விதிக்கும் வரம்புகள்

மனித குலத்தின் நன்மை கருதி நம்மைப் படைத்த கீழ்காணும் வரம்புகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கிறான் இறைவன். இவற்றை சற்று கவனமாக ஆராய்ந்தால் இவை ஒவ்வொன்றும் ஆரோக்கியமான சமூக அமைப்பு உருவாக இன்றியமையாதவை அறியலாம்.

- கருக்கொலை, சிசுக்கொலை இவற்றுக்குத் தடை (திருக்குர்ஆன் *17:31) (81:7,8)*
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆடைக் கட்டுப்பாடு, (திருக்குர்ஆன் *24:31, 33 :59)*
- பாலியல் வக்கிரத்தைத் தூண்டக்கூடிய செயல்களின் பக்கம் நெருங்கத் தடை (ஹதீஸ் மற்றும் திருக்குர்ஆன் *17:32)*
- ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பொழுக்கம், பார்வைக் கட்டுப்பாடு (திருக்குர்ஆன் *24:30,31)*
- பத்து வயதுக்கு மேல் ஆண்குழந்தைகளையும் பெண்குழந்தைகளையும் பிரித்துப் படுக்க வைத்தல், (ஹதீஸ்)
- இரு பாலர்க்கும் கட்டாயக் கல்வி, (ஹதீஸ்)
- பெண்கள் உரிய ஆண் துணையின்றி நீண்ட பயணங்கள்

மேற்கொள்ளத் தடை,, (ஹதீஸ்)

● அந்நிய ஆண்களும் பெண்களும் சரளமாகப் பழகுவதற்க்குத் தடை (திருக்குர்ஆன் 24:27, 33: 55)

● அந்நிய ஆண்களோடு பெண்கள் குழைந்து பேசத் தடை, (திருக்குர்ஆன் 33:32)

● வயது வந்த அந்நிய ஆணும் பெண்ணும் தனித்திருக்கத் தடை (ஹதீஸ்)

● வயது வந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் விரைவாகத் திருமணம், (திருக்குர்ஆன் 24:32 மற்றும் ஹதீஸ்)

● மணப்பெண்ணின் சம்மதமின்றி மணமுடிக்கத் தடை ( (திருக்குர்ஆன் 17:31)

● திருமணம் என்பது வாழ்க்கை ஒப்பந்தம், அங்கு வரதட்சணைக்குத் தடை, பெண்ணுக்கு மணக்கொடை கொடுத்து மணமுடிக்கக் கட்டளை (திருக்குர்ஆன் 4:4, 17:31)

● குடும்பத் தலைமையும் பொருளாதார சுமையும் ஆண் மீது கடமை,. குடும்ப நிர்வாகம் குழந்தை வளர்ப்பு பெண் மீது கடமை, பொருளாதாரச் சுமை பெண் மீது அல்ல. (திருக்குர்ஆன் 4:34 மற்றும் ஹதீஸ்)

● இணக்கமில்லாத மணவாழ்வில் இருந்து பிரித்துக் கொள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை (திருக்குர்ஆன்)

● கற்பொழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறினால் கசையடி (திருக்குர்ஆன் 24:4)

● விபச்சாரக் குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் (திருக்குர்ஆன் 24:2 மற்றும் ஹதீஸ்)

● அவற்றை பொதுமக்களுக்கு முன் நிறைவேற்றுதல் (திருக்குர்ஆன் 24:2)

(குறிப்பு: ஹதீஸ் என்றால் நபிகள் நாயகம் மூலமாக இடப்பட்ட கட்டளைகளைக் குறிக்கும்)

ஆண்களுக்கு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இஸ்லாம் வழங்கும் பலதாரமணத்திற்கான அனுமதியும் கூட சமூகத்தில் விபச்சாரம் மலிந்து தந்தைகள் இல்லாத சமுதாயம் உருவாகும் நிலை உண்டாகாமல் தடுக்கவே என்பதை சிந்திப்போர் அறியலாம்.

மேற்படி வரம்புகள் அனைத்தையும் விதித்தவன் இவ்வுலகின் அதிபதி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆண் பெண் இயற்கை உட்பட இவ்வுலகில் உள்ள அனைத்தையும் படைத்தவன் அவனே! முக்காலத்தையும் உணர்ந்தவனும் மனிதனுக்கு எது எப்போது நல்லது என்பதைப் முழுமையாக அறிந்தவனும் அவனே! இறுதித் தீர்ப்பு நாளன்று நம்மை விசார்க்க இருப்பவனும் அவனே! அவனது ஏற்பாட்டில் குறைகண்டு தான்தோன்றித்தனமாக மனித வாழ்க்கை தொடருமானால் பாலியல் பலாத்காரங்கள் மட்டுமல்ல, கொலைகளும் கொள்ளைகளும் கொடுமைகளும் வரம்புக்கு மீறி பரவுவதைத் தவிர்க்கமுடியாது!

பாலியல் கொடுமைகளுக்கான தீர்வைத் தேடி...

# பெண்ணடிமைத்தனம் அல்ல பாதுகாப்பான சுதந்திரம் பர்தா!

இஸ்லாம் என்ற இறைதந்த வாழ்வியல் மனிதன் சந்திக்கக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அழகான தீர்வுகளை வழங்குகிறது. இறைவனின் ஏவல்- விலக்கல்களை ஏற்று வாழும்போது இவ்வுலகிலும் அமைதி உண்டாகும். மறுமை வாழ்விலும் சொர்க்கம் வாய்க்கிறது. இறைவன் நமக்கு கற்பிக்கும் கட்டுப்பாடுகள் மனிதனின் அமைதியான வாழ்க்கைக்கு பங்கம் ஏற்படாமல் இருப்பதற்காகவே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு இறைவன் நமக்குப் பரிந்துரைக்கும் ஒன்றுதான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆடை ஒழுக்கம் என்பது. அவ்வாறு பெண்களுக்கு இஸ்லாம் பரிந்துரைக்கும் பர்தாவை சிலர் பெண்ணடிமைத்தனம் என்று விமர்சிக்கிறார்கள்.

### அடிமைத்தனம் அல்ல

முதலில் ஒரு அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாம், மாற்றங்களை ஒரு மனிதனின் மனதிலிருந்து எதிர்பார்க்கிறது. எந்த ஒரு விஷயத்தையும் கட்டாயப்படுத்தித் திணிப்பதை இஸ்லாம் விரும்பவில்லை. விருப்பமின்றிச் செய்யும் செயல்களில் மனப்பூர்வமான ஈடுபாடு இருக்காது என்பதை அறிந்த இஸ்லாம் கட்டாயப்படுத்துதலை ஏற்படுத்தாமல் உலகில் மனிதனிடம் ஏற்படும் தடுமாற்றங்களையும் கூறுவதோடு நில்லாமல் அதைப் போக்கும் காரணிகளையும் விளக்குகிறது.

அது போலவே பர்தா அல்லது ஹிஜாப் என்று அறியப்படும் பெண்களின் உடை அதாவது விஷயத்திலும் இஸ்லாம் கட்டாயப்படுத்தவில்லை. இஸ்லாம் இவ்வுலகில் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எப்படி வாழ்ந்தால் கண்ணியமாக வாழ முடியும் என்பதை தெளிவாக கற்றுத்தருகிறது.

மனிதனின் இயற்கையான உணர்வான வெட்கம் என்பது மனிதர்களுக்கே உரித்தான உயர்ந்த சிறந்த பண்பாகும். வெட்கமின்றிச் செயல்படுதலை இஸ்லாம் நடை, உடை, பாவனை என எல்லா காரியங்களிலும் தடை செய்கிறது.

நாகரீகம் வளர்ச்சி அடையாத காலங்களில் கூட மனிதன் தன் உடம்பை இலை, தளைகளை வைத்து மறைப்பதில் அதிக கவனம் எடுத்துக் கொண்டான். எனில் உடம்பை மறைத்தல் என்பது மனிதர்களுக்கு இடையில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் உரிய செயல் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

அத்தகைய சமூகத்தில் மரியாதையும் கண்ணியமும் பெற்றுத் தரும் உடை விஷயத்தில் இஸ்லாம் அதிகக் கவனம் செலுத்துகிறது. உடை என்பது சமூகத்தில் ஒழுக்க வீழ்ச்சிக்கு மிக முக்கிய காரணியாக அமைகிறது. எனவேதான் ஒருவர் உடை அணியும் விதம் மற்றவர்களின் கவனத்தை திசை திருப்பாத விதத்தில் இருப்பதற்கும், தங்களது

மறைவான பகுதிகள் வெளியில் தெரியும்படியான இறுக்கமான ஆடைகளை தவிர்க்கும்படியும் இஸ்லாம் அறிவுறுத்துகிறது. இது இருபாலருக்குக்கும் பொதுவானதுதான்.

### ஆடை வரம்புகள்

பெண்களைப் பொறுத்தவரை முகம் மற்றும் கை மணிக்கட்டுக்கு கீழ் தவிர மற்ற எல்லா பகுதிகளையும் மறைத்துக் கொள்ள இஸ்லாம் அறிவுறுத்துகிறது. இவ்வாறு மறைப்பதற்கு ஏதுவான உடையாக தற்காலத்தில் வடிவமைத்திருக்கும் பர்தா இருப்பதனாலேயே இஸ்லாம் கூறும் அறிவுரையை மனப்பூர்வமாக பேணும் பெண்கள் இதனை அணிகின்றனர். கண்ணியத்தையும் பாதுகாப்பையும் சமுதாயத்திலிருந்து பெற விரும்பும் பெண்களுக்கான சிறப்பான பரிந்துரையாகவே இஸ்லாம் இதனைக் கூறுகிறது. இதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட பெண்கள் மட்டுமே பர்தாவை அணிகின்றனர். இதனை தங்கள் உடலை முழுமையாக மறைத்துக் கொள்ளும் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கையை வைத்து தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

பர்தா போன்ற உடை அணிய வேண்டியதற்கான காரணத்தை அருள் மறை வசனம் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது.

● **நபியே! நீர் உம் மனைவிகளுக்கும் உம் பெண் மக்களுக்கும் ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும் அவர்கள் தங்கள் தலை முந்தானைகளை தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக: அவர்கள் (கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க இது சுலபமான வழியாகும். மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன். மிக்க அன்புடையவன்.** (*திருக்குர்ஆன் 33 :59*)

பெண்கள் கண்ணியமானவர்கள் என்று அறியப்படுவதற்காகவும், அவர்கள் சமூகத்தில் மோசமானவர்களால் விளையும் தொல்லைகளிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்காகவும்தான் பர்தா போன்ற உடையை உபயோகிக்க இஸ்லாம் பெண்களுக்குப் பரிந்துரைக்கிறது.

## பெண்களை கனிவோடு நடத்துக!

● பெண்களுடன் அன்பாகவும், கனிவுடனும் நடக்குமாறு இஸ்லாம் ஏவுகின்றது.

● **நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப் பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு கூடாது. பகிரங்கமான கெட்ட செயலை அவர்கள் செய்தாலொழிய, பெண்களுக்கு நீங்கள் கொடுத்ததிலிருந்து சிலவற்றை எடுத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் (துன்பம் கொடுத்து) தடுத்து வைக்காதீர்கள். இன்னும், அவர்களுடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள் - நீங்கள் அவர்களை வெறுத்தால் (அது சரியில்லை ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும் அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்தி விடலாம். (திருக்குர்ஆன் 4:19)**

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.

## முக்கிய அறிவிப்பு:

நமது சந்தாதாரர்களின் தொலைபேசி எண்ணை மறுபதிவு செய்து வருகிறோம். எனவே இந்த இதழை தபாலில் பெற்றுவரும் அனைத்து வாசகர்களும் தங்கள் சந்தா எண் மற்றும் தொலைபேசி எண்ணை 7760075000 என்ற எண்ணுக்கு SMS செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். - நிர்வாகம்

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எஃ.ப்: 9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

## பெண்களின் மானத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கை

பெண்களது மானத்திற்கான உரிமையையும் உத்தரவாதத்தினையும் வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். கற்புள்ள பெண்கள் மீது அபாண்டமாகப் பழி சுமத்துவோரை எவ்வாறு அரசு தண்டிக்கவேண்டும் என்பதை கீழ்கண்ட இறை வசனம் தெரிவிக்கிறது.

● ‘எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதுறு கூறி, (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டுவராவிட்டால், அவர்களை நீங்கள்80 கசையடி அடியுங்கள். பின்னர் அவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். ஏனெனில், நிச்சயமாக அவர்கள் வரம்பு மீறியவர்கள்‘. (திருக்குர்ஆன் 24:4)

